NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2024

TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER II

Time: 2 hours 100 marks

PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY

1. This question paper consists of 8 pages. Please check that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. Number your answers exactly as the questions are numbered.
5. All answers must be in TAMIL.
6. It is in your own interest to write legibly and to present your work neatly.

IEB Copyright © 2024

SECTION A பகுதி ஒன்று

QUESTION 1

ஐந்து தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஏதேனும் ஒன்றைப் பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

1.1 என் அழகான குடும்பம்

1.2 நீரின் மகிமை

1.3 மாணவர்களின் பள்ளி வாழ்க்கை

1.4 பெரியவனாய் ஆனப் பிறகு

1.5 என் உயிர் தோழன் (செல்லப் பிராணி)

30 marks

IEB Copyright © 2024

SECTION B பகுதி இரண்டு

QUESTION 2

ஏதேனும் மூன்றைப் பற்றி எழுதுக
(Choose any 3 questions from the 4 questions given.)

2.1 கடிதம் : உன் தம்பியின் பிறந்த நாள் விழாவைப் பற்றி உன் தோழனுக்கு கடிதம் எழுதுக. (10)

2.2 விளம்பரம் : நீ வேலைச் செய்யும் பேக்ரிக்கடையில் (Bakery) சில சிற்றுண்டிகள் குறைந்த விலைக்கு விற்கப் போகிறாய். ஐந்து விதமான கேக்குகளின் பெயர்களை குறித்து ஒரு விளம்பரம் தயாரிக்கவும். (10)

2.3 SMS : எச் எம் எச்: வரிசையாக எழுதுக :
அக்காவுக்கு பக்கவாதம் ஏற்பட்டது.
வணக்கம் . நலமா?
நீங்கள் எங்களை வந்து பார்க்க வேண்டும்.
நன்றி வணக்கம்.
எனக்கு வருத்த மானச் செய்தியுள்ளது. (10)

2.4 சுருக்கி எழுதுக

தமிழின் சொல்லினிமை

உலகில் மக்கள் பல மொழிகளைப் பேசுகின்றனர். பழங்காலத்தில் மக்களால் பேசப்பட்ட பல மொழிகள் இன்று பேச்சு வழக்கில் இல்லை. ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பேசப்பட்ட தொன்மையான மொழி தமிழ்மொழி. அத்தமிழ் மொழியே நம் தாய் மொழி.

தமிழ் மொழி மீது தமிழர்க்கு அளவற்ற பற்று உண்டு. தமிழர் தம் தாய் மொழியைக் குறிக்கும் பொழுதெல்லாம் ஓர் அடைமொழி கொடுத்தே கூறுவர். தேன்தமிழ் என்றும், தீந்தமிழ் என்றும் கூறி அதன் இனிமையைப் புலப்படுத்துவர். பைந்தமிழ் எனப் பெயரிட்டு அதன் இளமைத் தன்மையைச் சுட்டுவர். செந்தமிழ் என அழைத்து, அதன் செம்மையைக் குறிப்பர்.

IEB Copyright © 2024

நமது முன்னோர் நம் மொழிக்குத் தமிழ் எனப் பெயரிட்டனர். 'த' வல்லினத்தைச் சார்ந்தது. 'மி' மெல்லினத்தைச் சார்ந்தது. 'ழ்'

இடையினத்தைச் சார்ந்தது. 'ழ' கர ஒலி பிற மொழிகளில் இல்லாத சிறப்பான ஒலி. இவ்வாறு மொழியின் பெயரே 'இனிமை' என்னும் பொருள் தருவதாய்ச் சறப்பாய் அமைந்துள்ளது.

[தென்னாப்பிரிக்காத் தமிழ்ப் பாடநூல்: நிலை 9]

(10)

30 marks

IEB Copyright © 2024

SECTION C பகுதி மூன்று

QUSTION 3

கீழ்வரும் பகுதியை நன்கு படித்து, பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை தருக :

உலகில் மொழி உருவம் பெருவதற்கு முன் இசை பிறந்து விட்டது என்பர். மனிதன் தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு இசையே கருவியாயிற்று. பண்டைத் தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. பண்கள், இசைக்கலைஞர்கள், இசைப்பாடல்கள் என இசை பற்றிய ஏராளமான குறிப்புகள் இலக்கியங்களில் உள்ளன.

தமிழ்ச்சூழலில் வளர்ச்சி பெற்ற இசை தமிழிசை ஆகும். குறிப்பாக, தமிழர்களின் செவ்விய இசை மறைமையைக் குறிக்கிறது. தாலாட்டு முதல் ஒப்பாரி வரை தமிழர் வாழ்வின் ஒவ்வொரு பருவத்திலும் இசை இடம் பெற்றுள்ளது. அதில், தமிழர்களின் பண்பாடு மற்றும் பாரம்பரிய இசைக்கருவிகளுள் நாதசுவரம், தவில், புல்லாங்குழல் சிறப்பான இடத்தை வகிக்கின்றன.

[மு. பொன்னைவைகோ, தென்னாப்பிரிக்காத் தமிழ்த்துணைப் பாடநூல் நிலை 9]

3.1 தமிழில் வல்லின மெய்கள் யாவை? (3)

3.2 பெயர்ச்சொல் என்றால் என்ன? (1)

3.3 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு (2) பெயர்ச்சொற்கள் எழுதுக. (2)

3.4 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு (2) வினைச்சொற்கள் எழுதுக. (2)

IEB Copyright © 2024

3.5 ஒருமைக்குப் பன்மை எழுதுக
உம் : மொழி – மொழிகள்

3.5.1 தவில் (1)

3.5.2 புல்லாங்குழல் (1)

3.5.3 நாதசுவரம் (1)

3.5.4 குழல் (1)

3.5.5 தாளம் (1)

3.5.6 மரம் (1)

3.6 ஆண்பாலுக்குப் பெண்பால் அமைக்கவும்
உம் : அண்ணன் – அக்காள்

3.6.1 பாட்டன் (1)

3.6.2 பாடகன் (1)

3.6.3 தந்தை (1)

3.6.4 தேவன் (1)

3.6.5 தோழன் (1)

3.6.6 அவன் (1)

IEB Copyright © 2024

3.7 எதிர்ச்சொல் தருக
உம் : துன்பம் – இன்பம்

3.7.1 திற (1)

3.7.2 குளிர் (1)

3.7.3 நன்மை (1)

3.7.4 அது (1)

3.7.5 நட்பு (1)

3.8 சேர்த்து எழுதுக

3.8.1 இசை + கலைஞர் (1)

3.8.2 தமிழ் + சூழலில் (1)

3.8.3 தென் + இந்தியா (1)

3.8.4 வாசிக்க + படும் (1)

3.8.5 மழலை + சொல் (1)

3.9 பிரித்து எழுதுக

3.9.1 கருவியாயிற்று (1)

3.9.2 துளைக்கருவி (1)

3.9.3 தமிழிசை (1)

3.9.4 கருவியாகும் (1)

3.9.5 வரலாற்றையுடைய (1)

IEB Copyright © 2024

3.10 ஒலிகள்
உம் : குயில் கூவும்

3.10.1 புலி _____ (1)

3.10.2 ஆடு _____ (1)

3.11 சரியாக எழுதுக.

3.11.1 நான் <u>வீடு</u> போனேன். (1)

3.11.2 மாலா <u>கடை</u> வந்தாள். (1)

3.11.3 பூனை <u>பால்</u> குடித்தது. (1)

40 marks

Total: 100 marks

IEB Copyright © 2024